## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 363/2020**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிவமணி | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ஆதிமூலம் | சமயம் | : |
| கிராமம் | : கலசம்பட்டு | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 40 |

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C. - 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**1ம் எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் களத்தம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் ஆஜர் எதிரி சத்தியமங்கலம். பட்டியல் சாட்சி 2 பன்னீர் செல்வம் நண்பர்.

2. கடந்த 2020 வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை . ஒரு நாள் நான் பாலப்பாடு டாஸ்மாக் கடை ஓரமாக நானும் எனது நண்பர் பன்னீர்செல்வமும் ஓரமாக நின்றுகொண்டிருக்கும்போது குடிபோதையில் வந்த யாரோ ஒருவர் என்னையும் பன்னீர்செல்வத்தையும் அசிங்கமாக பேசி தாக்கி விட்டு சென்றுவிட்டார்கள். யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி தாக்கியிருக்க கூடும் என்று நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலிசார் விசாரித்தனர்.

**( 1.11.03.2020 தேதியிட்ட புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும், புகாரிலும் கடந்த 10.03.2020 ந் தேதி மாலை 4 மணி அளவில் நானும் பன்னீர்செல்வமும் பாலப்பாடி டாஸ்மாக் கடையில் ஓரத்தில்

நின்று கொண்டிருக்கும்போது சத்தியமங்கலத்தை சேர்ந்த எனக்கு நன்கு தெரிந்த ஆஜர் எதிரியான நடராஜன் குடிபோதையில் வந்து பீர் பாட்டிலால் எங்களை தாக்கி னார்கள் என்றும் தடுக்க வந்த கமலக்கண்ணன், பழனி ஆகியோர்களையும் தாக்கியதாக போலிசார் விசாரரணையில் தெரிவித்து தற்போது இவ்வழக்கின் எதிரியுடன் சமாதானமாக சென்று உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

என்னை ஆபாசமாக பேசி யார் அடித்தார்கள் என்றால் தெரியவில்லை. சந்தேகத்தின் பேரில் எதிரிக்கு எதிராக சொன்னேன் என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 363/2020**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பன்னீர்செல்வம் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : கண்ணன் | சமயம் | : |
| கிராமம் | : கலசம்பட்டு | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 32 |

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C.- 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**1ம் எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் களத்தம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் ஆஜர் எதிரி சத்தியமங்கலம். அ.சா.1 சிவமணி எனது நண்பர்.

2. கடந்த 2020 வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை . ஒரு நாள் நானும் எனது நண்பர் சிவமணி என்பவரும் பாலப்பாடி டாஸ்மாக் அருகே ஓரமாக நின்றுகொண்டிருக்கும்போது குடிபோதையில் வந்த யாரோ ஒருவர் என்னையும் என் நண்பரையும் அசிங்கமாக பேசி தாக்கி விட்டு சென்றுவிட்டார்கள். யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி தாக்கியிருக்க கூடும் என்று என் நண்பர் புகார் அளித்தார். போலிசார் விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 10.03.2020 ந் தேதி மாலை 4 மணி அளவில் நானும் சிவமணியும் பாலப்பாடி டாஸ்மாக் கடையில் ஓரத்தில் நின்று கொண்டிருக்கும்போது சத்தியமங்கலத்தை சேர்ந்த எனக்கு நன்கு தெரிந்த ஆஜர் எதிரியான நடராஜன் குடிபோதையில் வந்து பீர் பாட்டிலால் எங்களை தாக்கி னார்கள்

என்றும் தடுக்க வந்த கமலக்கண்ணன், பழனி ஆகியோர்களையும் தாக்கியதாக போலிசார் விசாரரணையில் தெரிவித்து தற்போது இவ்வழக்கின் எதிரியுடன் சமாதானமாக சென்று உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

என்னை ஆபாசமாக பேசி யார் அடித்தார்கள் என்றால் தெரியவில்லை. சந்தேகத்தின் பேரில் எதிரிக்கு எதிராக சொன்னேன் என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**